விமானதாக்குதலைகண்டித்துகூட்டுறவாளர் பேரணி

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 08 இதழ் 132
யாழ்ப்பாணம் புதன்கிழமை 22-6-1994

(யாழ்ப்பாணம்)
சிறிலங்கா அரச படைகள் நடத்தும் விமானத் தாக்குதல் மற்றும் ஷெல் பிரயோகத் தாக்குதல்களை கண்டித்து யாழ் மாவட்டகூட்டுறவாளர்களால் யாழ் நகரில் நேற்று மாபெரும் கண்டனப் பேரணி நடாத்தப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

தேர்தல் குளறுபடிகள்:

வன்னி வாக்காளர் இடாப்பில்

பத்தாயிரம்ராணுவத்தினர்பதிவு

சிங்களவர் வாக்குகளை அதிகரிக்க முயற்சி

(கொழும்பு)
வன்னிப்பகுதி வாக்காளர் இடாப்பில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினரின் பெயர்களை பதிவதற்கான முயற்சிகள் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

வருகாதம் யூன் மாதம் முதலாம் திகதி வாக்காளர் பதிவுகள் புதுப்பிக்கப்படும் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி வன்னியை விரதேசத்தில் இரா ணுவத் தவறாளிகள் உள்ள இரா ணுவ கிப்பாய்வது பெயர் களும் வவுனியா மாவட்டத் திலிருக்கவாளர் பதிவுகளில் இரா ணுவ பதிவுப்படுவதற்குரிய முயற்சி மேற்கொள்ளப்படுகிறது வருகிறதாக.

இப்பகுதியில் கடமையாளிகள் ஈடுபடுத்தப்பட்ட இராணுவத்தின

(4-ம் பக்கம் பார்க்க)

போரை நிறுத்துக; ஜனாதிபதிக்கு மகஜர்!

(யாழ்ப்பாணம்)
தமிழீழ விடுதலைப் புலிகளின் நகலெண்ண சமிக்ஞை களை புரிந்துகொண்டு இனப் பிரச்னைக்கு தீர்வுகாண்பதற்கு ஏற்ப கொழும்பு அரசு தனது நிலையை நீக்கி கழுவரை நிலையை உருவாக்கி அரசு மற்ற போர் ஊக்கி நிறுத்த

(4ம் பக்கம் பார்க்க)

செஞ்சிலுவைப் பிரதிநிதி பலாலிக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)
சர்வதேச செஞ்சிலுவைச் சங்க, யாழ்ப்பாண பிரதிநிதி செல்வி மேரி, பலாலி இராணுவ உயர்அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடாத்தியுள்ளார். எதிர்வரும் வெள்ளிக்கிழமை பலாலி இராணுவ முகாமில் இந்த பேச்சுக்கள் நடைபெற இருப்பதாக, சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. -வி-தி

வடக்கில் தேர்தல் நடத்தமுடியாத நிலை

(கொழும்பு)
அரசியல் யாப்புப்படியும் தேர்தல் சட்டப்படியும் புலிகளின் கட்டுப்பாட்டுக் உள்ள வடபகுதியில் தேர்தலை நடத்த முடியாதநிலை ஒன்று உள்ள தாக புதிய பிரச்னை யொன்று ஜனாதிபதி தேர்தலில் எதிர் கொள்ளவேண்டியநிலை அரசுக்கு உள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

எனினும் வடபகுதியிலுள்ள நிலைமைகள் வன்னத்தில் கொள்ளும்போது வாக்குச்

(4ம் பக்கம் பார்க்க)

முதலில் ஜனாதிபதி தேர்தல் நடத்துவதுகடினமாயிருக்கும்

(கொழும்பு)
முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது கடினமான செயலாக அமையும் என ஜ. தே. கட்சியின் தலைமைப்பீடத்திற்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறின.

நடவடிக்கையாக அமையும் கிளிக் ஆரோசனைக்கு சுமிகுக் சாக்கியுள்ளார்கள்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வடக்கில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியாத நிலை இருப்பதே இதற்குக் காரணம் என்றும் கூறப்பட்டுள்ளது.

தென்பகுதியில் ஜ. தே. க நடத்தும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் எதிர்வரு

(4 ம் பக்கம் பார்க்க)

மக்கள் கூட்டணி தீர்வுத் திட்டம் தயாரிப்பு

(கொழும்பு)
இனப் பிரச்னை விடயத்தில் தீர்வுத் திட்டம் ஒன்றைத் தயாரித்து வரும் மக்கள் கூட்டணி, வெகுவிரைவில் அதன் அறிக்கையைச் சமர்ப்பிக்கவுள்ளது.

எதிர்வரும் தேர்தலில் இத்தீர்வுத் திட்டத்தை முன்

(4-ம் பக்கம் பார்க்க)

4,000துப்பாக்கிகள் மீளப் பெறப்படும்!

(கொழும்பு)
ஜே. வி. பி.யின் தீவிரவாத பிரச்னை உச்சகட்டத்தில் இருந்தபோது அரசினால்வாரிக்கு வழங்கப்பட்ட 4000 துப்பாக்கிகளை மீளப் பெறுவதென்று, பாதுகாப்பு அமைச்சு நட

(4-ம் பக்கம் பார்க்க)

இலங்கைத் தூதரகம் முன் சென்னையில் ஆர்ப்பாட்டம்

(சென்னை)
சென்னையிலுள்ள இலங்கை தூதரகத்தின் முன் நேற்று தமிழக மீனவர் இளைஞர் முன்னணியைச் சேர்ந்த இளைஞர்கள் பெரும்

(4-ம் பக்கம் பார்க்க)

ஐ. தே. க.வின் தேர்தல் செலவுக்கு 250 கோடி டொலர் பெற முயற்சி

(கொழும்பு)
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் அவர்களுக்கான அமெரிக்காவிலிருந்து 250 கோடி ரூபாவைப் பெற்றுக்கொள்ள திட்டமிடப்பட்டிருப்பதாக கொழும்பு வட்டாரங்கள் ஒன்று தெரிவித்தன.

அமெரிக்க வர்த்தகர்களிடமிருந்து இந்தப் பணத்தைக் கடனாகப் பெற்றுக்கொள்வதற்கும் முயற்சி மேற்கொள்ளப்படுவதாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது.

(4-ம் பக்கம் பார்க்க)

கிளாலி - பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று புதன் கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறுகிறதென்று புலிகளின் அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர். (ம)

யாரை ஆதரிப்பது மு. கா. விரைவில் முடிவு

(கொழும்பு)
நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எக்கட்சியை ஆதரிப்பது எனபது குறித்து எதிர்வரும் 25ம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள கூட்டத்தில் முடிவு எடுக்கப் படும் என அக்கட்சியின் தலைவர் ஜனாப். எம். எச். எம். அஷ்ரப் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீ. ல. சு. கட்சியை ஆதரிப்பதா? அல்லது ஐ. தே. க.வை ஆதரிப்பதா அல்லது தனித்தே போட்டியிடுவதா என்பது அக்கட்சியின் தீர்மானிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். -வ-தி

வடக்கு-கிழக்கு இணைப்பை சு. க. தொடர்ந்து எதிர்க்கும்!

(கொழும்பு)
"வடக்கு-கிழக்கு இணைப்பை எமது கட்சி தொடர்ந்து எதிர்த்து வந்துள்ளது. இந்த விடயத்தில் மாற்றம் எதுவும் இல்லை. ஆனால் வடக்கு-கிழக்கு வாழும் தமிழ்-முஸ்லிம் மக்களுக்கு விரோதமானதும், நியாயமானதுமான தீர்வுத் திட்டம் ஒன்று முன்வைக்கப் படும். தங்கள் ஒருமித்த தாகவே வாழக்கூடிய

— சிறிமா பேட்டி

தான உண்மையான பாதுகாப்பு அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்படும்."

(4ம் பக்கம் பார்க்க)

தேரேறி வீதியுலாவரும் அன்னை

நயினை நாகபூசணியம்மையே!

ஈழத்தமிழர்களின் குறை தீர்த்து எம்மைக் காப்பாயே!!!

அந்தமிலா பெருமையினை அறிந்தேன் அம்மா
அகங்குளிர உருகியுளம் களித்தே நின்றேன்
பக்கமிலாத் பெருவாழ்வு பெறவே வேண்டு
வதியுடன் உனைத்தினமும் தொழுதேன் அம்மா
தமிழு தடைஏதும் இன்றி அருளிதனை தந்த
நாணியோற்றுக் நயினையுறை நாகேஸ்வரியே
செல்மலர் பொரிவாரும் சீரும் சேர் கொண்டு
செளுகலர்கள் நிதம் சூழிட அருள் நாகம்மா

அண்டசராசரங்கள் எல்லாம் படைத்தும் காத்தும் அருளுகின்ற அகிலாண்டகோடிப் பிரமாண்ட நாயகியாக விளங்குகின்ற அன்னை நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மாள் இன்று தேர் ஏறித் திருவீதி வலம் வருகின்றாள்.

நாகம் அணியும் பரமர் (பரமன்) பாகம் உறையினள் நாகபூஷணி என்னும் நாமம் பூண்டு நயினாதீவிலே கோயில் கொண்டெழுந்தருளியிருந்து, தம்மை நாடுவோர் அடியவர்க்கு நலிவகற்றி அவர் தம் வாழ்வு உவந்து குவிர வரமருளுகின்றாள். அந்த அன்னையை மனிதரும், தேவரும், மாமுனிவரும் வந்து (சென்னி) குனிந்தும் சேவடியைத் தொழுது நின்று நயினை வெண்கரம் பெற்று "நயினை செல்லாம் தரும் அம்பர் எங்கவதிலே வந்தரும் பூங்குழலின் அபிராமி கைக்கொண்டவளே" என்ற அபிராமிபட்டர் கூற்றுக்கு அமைய அம்பிகையின் கடைக்கண்பார்வையினால் நயினை வெண்கரம் பெற்று பெருவாழ்வு வாழ்கின்றார்கள். அந்த அன்னையினுடைய அருள்பொலிவு திருவிழாக் காலத்திலே இன்னும் மனோரம்மியமிக்க இருக்கும் அதனைக் காணக்கண் ஆயிரம் வேண்டும் என்று அபிராமிப்பட்டரோ "அந்த நாயகிக்கண்டு தொழ நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நாளு முனே என துக்கு படைத்த கண்கள் போதாது அம்பிகையைக் கண்டு தொழுவதற்கு என வேண்டுகின்றார். அவ்வருள் ஓர் அழகு அம்பிகையின் உடைய அழகு அதை அழகிற்கு ஒருவரும் ஒவ்வாத வகையில் அந்த வாதுளத்தில் தோன்றிய எம்பெருமாட்டியின் உடைய பேரழகை கண்டு தொழுவதற்கு வரவு முன் செய்ததினை வந்து மூண்டதோ என எண்ணத் தோன்றுகின்றது; இவ்வேளையிலே

ஆடிவரும் ஓடம் எங்கும் அரோகரா ஒலிக்க கடலா இதுவோ கடல் அலையா என எண்ணத் தோன்றும் அடியார் திருக்கூட்டமும் வண்ணத் தேர் வீதிகளும், விண்ணைப் பிளக்கும் ஆலய மணியோசையும் கண்ணுக்கிடைக்கும் உவமேயான அழகான அழகும் அம்மா சொல்லுக்கடங்கியே பராசக்தி சூரிதனக்கெல்லாம் என்று பராபரமாகுமதன் மாயக் நயினையிலே ஆட்சி செலுத்துகின்றது எவரால் அவ்வருள் ஓர் அற்புதக் காட்சி, ஓர் ஆனந்தக் காட்சி சொற்பிரபஞ்சத்திற்குள்ளே அடக்கமுடியாத ஓர் சொல்லொணாக் காட்சியாகிய எம்பிறவிப் பயனே இனி.

"மனிதப் பிறவியுமே வேண்டுமதே இந்த மானிலத்தே" என்ற மணிவாசகப் பெருமானின் மனிதப் பிறவியின் மாண்பை எடுத்து விளக்குகின்ற காட்சி அம்பிகையின் உடைமையாகி, சகோதரியாய், துணையாய், பாசத் தொடரெல்லாம் வந்த அரிக்கின்றாள். எம் நெஞ்சக் கனலை நெகிழ்ந்து உருகச்செய்து வஞ்சப்புலன் ஐந்தின் வாய்களை அடைக்கின்றாள். ஆசைக்கடலில் அலைப்பட்டு அல்லோர்க்கு தனது தேசக்கரங்களை நீட்டி நிம்மதி அருளுகின்றாள் அவ்வருள் உலக நாயகியாகிய என் அன்னைக்கு தொண்டுசெய்யாது அவள் பாதம் தொழாது தூயநெறியோடு நன்றும் செல்லாத பழிக்கே சுழன்று கொண்டவர்களையே செய்து வாழ்நாளைக் கழித்தும் வரவர் தம்மோடு கூடிவந்திடாதும் சொல்லை வழிக்கே வழிபட எமக்கு நெஞ்சுண்டு. அவ்வழியே சென்று தம்அருமையர்கள் வேண்டுதலைக்கு அறிந்து. அவர்கள் வேண்டு முழுதும் கொடுத்து அருளுகின்ற அந்த அன்னையான வந்து நம் அடியார்கள் எல்லோருடைய ஒருமித்த வேண்டுதலாக இன்று இருப்பது ஒன்று உண்டு.

யாதேனும் தாமே உன்னை எங்கள் கண்களால் கண்டு எம் கண்கள் களிக்கும்படி வரக் கண்டு தொழவேண்டும் உன் திருவடியிலே வீழ்ந்து வணங்கவேண்டும். உன் திருவீதியிலே விழுந்து புரளவேண்டும். உன் அருள் மழையிலே நாம் நனைய வேண்டும். இவற்றையெல்லாம் நாம் இப் பிறவியிலே பெறவேண்டும். இப் பிறவி தரும்பிறவி எப்பிறவி வாய்க்குமோ என ஏங்கி நிற்கின்றோம். எம் எல்லோருடைய ஒருமித்த வேண்டுதலையும் அம்பாள் நிச்சயம் செவிமடுப்பாள். அருளுடைய அருள் எமக்கு என்றும் உண்டு என்று கூறி எமது இருத்தலோடும் எமக்கு துணையும் தொழும் தெய்வமும் பெற்ற தாயுமாக இருந்து எமை எங்கும் காத்தருளுகின்ற அந்த உலகநாயகியை இமைப்பொழுதும் எம் நெஞ்சை விட்டு நீங்காதபடி நிற்கும், இருந்தும், கிடந்தும், நடந்தும் நினைப்பது உன்னை என்றும் மறக்காது உன்மலர்த்தாள் என்ற அன்னையை வேண்டி, அன்னையை துதிப்போர்க்கு வரங்கொடுப்போர். துதிப்போர். நெஞ்சில் நினைப்போர்க்கு பெறுதற்கு அரிய பெரிய பதினாறு பெறும் கிடும் என்கூறி அம்பிகையை என் உள்ளக் கமலத்திருத்தி விடைபெறுகின்றேன்.

நயினை கிருஷ்ணசாமி கிருபானந்தா (ஆசிரியர்)
(4-ம் வகுப்பு பாரிசை

(இ-1093)



கலைநகர், சித்தன்கேணி

திரு. வே. தம்பையா அதிபர்

மணிவிழா மலர்

"மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை" என்ற செம்மொழிக் கொள்கையாகக் கொண்டு செயலிற் காட்டிய கர்மவீரன் அதிபர் வே. தம்பையா அவர்களின் பொதுப்பணிகளைப் பாராட்டிக் கௌரவிக்கும் வகையில் மணிவிழாக் கொண்டாடவும் மலர் வெளியிடவும் நன்றியுள்ளம் நிறைந்த நற்றோருக் பெற்றோருக் மற்றோருக் முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது

— திரு. கி. இராமலிங்கம் (நெறி)

நீதியை நிலைநாட்ட உழைத்த மாமனிதர்
— சிலத்திரு சித்தாந்த சரணியம்

கலைநகர் மக்கள் உயர்வுபெற உழைத்தவர்
— ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம்

கிளைநெறிபற்றும் செந்தமிழ்ப் பற்றும் கொண்டவர்.
— இலக்கியச் செல்வி தங்கமா அரியரட்ணம்

உயர்சிந்தனையும் நிமிர்ந்த உணர்வும் மிக்கவர்.
— பிரதேச முன்னாள் கல்வி பணிப்பாளர்
இரா. சுந்தரலிங்கம்.

சூரியன் போல் வாழ்க. — அருங்கலை விநாசித்தம்பி.
மக்கள் உள்ளம் மகிழ்ந்த வாழ்ந்தவர்.
— கண்டிதர் சித்தாந்த வாசகப்புலவர் திருநாவுக்கரசு

கலைநகரின் பெருமகன்,
— வைத்தியகலாநிதி க. கு. வாசுதேவன்

வாழும்போதே வைரவிழாப்பதும் பெற்றவர்.
— கலாநிதி கி. வ. இந்திரபாலன்

வெகுபெற்ற தொழிற்சங்கவாதி
— பிரதேச செயலர் து. வைத்திலிங்கம்

கலைநகர் மக்களின் இதயக்கனி
— பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ. கி. கோலாயுதம்

மட்டு இந்துவின் உயர்வுக்கு உதவியவர்
— முன்னாள் அதிபர் க. அருணாசலம்

வாழ்த்துவோர்; லீலா ஸ்ரோர்ஸ் கந்தன் பேக்கவுஸ் சகோதரர்கள், ந. வாசுதேவன் கந்தன் சன்ஸ் சகோதரர்கள், க. சந்தசாமி கந்தன் சன்ஸ் சகோதரர்கள், கிராமவர் எம்பெருமான் நிலையம் சித்தன்கேணி மொ ஸ்ரூடியோ கந்தன் கிருபா சித்தன்கேணி, க. அருணாசலம் சித்தன்கேணி. நிரஞ்சனஸ் சித்தன்கேணி, நா. பரணீதரன் அரசி நெற்று, பொது பத்மநாதன், சித்தன்கேணி

(இ-1096)

மணிவாக்கு

நம் ஆசைகளுக்கு ஏற்றபடி நம் சதிகளை பெருக்குவதைவிட நம் சதிகளுக்கேற்றபடி ஆசைகளை குறைக்க முயல்வது நலம்.

— அரிஸ்டோடில்

நமது நோக்கு

நாளை நடப்பது...!

"நாடகமே உலகம்; நாளை நடப்பதை மாற்றி வாரீர்!" — இது அனுரவப் பாடல் இங்கும் அரசியலில் நாளை நடப்பது என்னவாக இருக்கும்? திட்டவட்டமாக எதனையும் கூறமுடியாத அளவிற்குத் திடீர் திருப்பங்கள் நடைபெறக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன.

நாளை என்ன நடக்கும்? சர்வதேச உளவு நிறுவனங்கள் இதனை 'கோத்து' பிடித்து அறிவதைவிடத் தயார்த்து விடும்.

இந்த ரீதியில் பொருவதாரா நிபுணர்களின் உலக உளவுச் சேவைப் பிரிவு இலங்கையைத்திப் பரபரப்பாக ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது.

முக்கிய அரசியற் கட்சிகளில் ஒற்றுமையுடன், ஐக்கிய முன்னணி ஒன்றை அமைத்து, இனப்பிரச்சினைத் தீர்க்க ஜனாதிபதி முயற்சித்து வருகிறார் என்கிறது அறிக்கை.

அது மாத்திரமல்ல, தனிச்சேனா கூரே தலைமையில் ஒரு பிரிவினர் இதனை எதிர்ப்பதாகவும் அறிக்கை கூறுகிறது.

சாமினிகளார் கட்சியைக் கைப்பற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்போது கதை வேறுவிதமானதிருப்பதற்கு மாறி விட்டது.

அரசு கலைக்கப்பட்டு உறுதியான கலைநிதி விக்கிரம வீரசூரியரிற்கு எதிர்ப்புக் கலந்து வருகின்றன.

திடீர் அமுலாக்கல் அமைச்சின் செயலாளராக இருந்துகொண்டு, அரசியல் பேசலாமா என்ற விவகாரம் நாடாளுமன்றத்திற்கு வந்தது. அவருக்கு அரசியல் உரிமைஇல்லை என அமைச்சர் மீனல் விக்கிரமசிங்க தெரிவித்தார். அதற்கோடு விவகாரம் முடிவடைகிறது மீண்டும் அப்பிரச்சினை கேள்வி ரூபத்தில் எழுப்பப்படப்போகிறது.

இதேவேளை நிதியமைச்சின் செயலாளர் பாஸ்கரவிடம் ஓய்வு பெற்றுவிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் மீண்டும் மாற்று மதவிரிவுகளும் வரலாம் என்றும் செய்தி வெளிவந்துள்ளது.

நிதியமைச்சராக ரெனில் விக்கிரமசிங்க பதவி ஏற்கவிருக்கிறார் என்றதும் திடீரென சுகம் பெற்று விட்டாரா?

ஹேரா-ஜனாதிபதி இடையே திறப்பிலே சந்தித்ததும், அஷ்ரப் - தொண்டமான் கூடி, சந்திரிகா ஜனாதிபதி ஆகியோரைச் சந்திப்பதும் திடீர் திருப்பங்களுக்கு முன்னோடி நிகழ்ச்சிகளா?

முப்படைகளும் அடங்கிய புதிய தாக்குதல் படைப்பிரிவு

(தொடர்பு)

முன்னெடுத்துச் செல்லும் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு தற்போது நியமிக்கப்படுகின்ற பொது கட்டளையிடும் அதிகாரிகளே பொறுப்பேற்பர்.

பாதுகாப்பு அமைச்சின் கீழ்ச்சுடன் இந்த வாரம் முதல் புதிதாக நியமிக்கப்பட்ட தாக்குதல் படை பிரிவு பற்றி எதுத்த தெரிவிக்கப்பட்டிருக்கிறார் ஜனாதிபதி. ஜெனரல் ஜெயசூரிய இவ்வாறு தெரிவித்தார்.

வாழ் குடாவும் அதனைச் சூழவுள்ள தீவுகளுக்குமான படைகளுக்கு அதிகாரி ஜெயவீர தான் பொறுப்பாக இருப்பார்.

பூநகரி, ஆனையிறவு, பொற்றிக்கோணி; கிளிநொச்சி முல்லைத்தீவு ஆகியவற்றிற்கான 2வது தாக்குதல் படையணிக்கு பிரிகேடியர் பிரிஸ் பொறுப்பாக இருப்பார்.

மணலாறு உட்பட திருகோணமலையுக்கான சூழவுள்ள பிரதேசமும் அனுராதபுர மாவட்டத்தின் 3வது தாக்குதல் படையணி பொறுப்பில் இருக்கும்.

இது தவிர நடமாடும் ஆளணியடங்கிய அணி, இலகுரக அணி, விசேட படை, அதிரடிப்படை ஆகியனவும் மேலதிகமாக நிறுவப்பட்டுள்ளன.

வருகிற தளபதிகளுக்கு பலம் அதிகமாக இருந்தாலேயே இப்படியான பொறுப்புக்கள் பிரிக்கப்பட்டு வழங்கப்பட்டிருக்கிறது பற்றி தளபதிகளை நன்கு பேர்ட்டுப்படையணியை தெரிவுசெய்யும் வேளையில் இந்தத்தாக்குதல் அணி கடுமையானமெடுத்து போரையும் கொடுத்து செல்லும்.

புதிய தளபதிகளுக்குப்பிறகு காணுது அவர்கள் பலவீனமாவுள்ளன. அதனாலேயே உயர்தர பயிற்சி அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

வாறிவரும் எண்ணிக்கையுக்கு ஏற்பவும்புதிய உயர்களுக்கு ஏற்பவும் எமது படைகள் தயாராகி வருகின்றன எதிரி அவர் கூறினார். கே-கி

உலகக் கிண்ண கால்பந்தாட்டி

இன்றைய ஆட்டம்

(நியூயோர்க்)

இன்று 22ம் திகதி நடைபெறும். உலகக் கிண்ண உதைபந்தாட்டத்தில், இரு போட்டிகள் நடைபெறவுள்ளன.

ஒரு போட்டியில் கொலம்பியாவும் - அமெரிக்காவும் மோதுகின்றன. 1990ம் ஆண்டுக் போட்டியில், கொலம்பியா-ஐக்கிய அரபு அமீரகம் அணியை 2-0 கோல்களால், வெற்றி பெற்று, மேற்; ஜேர்மனியுடனான ஆட்டத்தில் வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

2-வது ஆட்டத்தில் றுமேனியாவும் - சுவிற்சலாந்தும் மோதுகின்றன. (வி-வி)

ஈழநாதம் பத்தும்

பீரம் பேணில்

"பீரம் பேணித் பாரம் தாங்கும்!" என்பது பொன்றை வேந்தன். தாங்கப்பாலை ஊட்டி வளர்த்தால், பிற்காலத்திற் குடும்பப் பாரம் தாங்கும் பலம் பெறும்.

தாய்ப்பாலின் தரம் மிகமிருதுவானது. எளிதில் ஜீரணமானது; மிருகப் பாலின் தரம் கடுமையானது. கொதிக்க வைத்திக்கொடுத்தால் தரம் மிருதுவாகி விடும். ஆனால் வைட்டமின் 'டி' அழிந்துவிடும். எனவே தோடம்பழச்சாறு அவசியமாகிறது. மிருகம் பாலுக்குச் சீனி சேர்க்கத் தேவையில்லை.

உலக சுகாதார நிறுவனம் தாய்ப்பால் கொடுப்பதைப் பிரசாரம் மூலம் ஊக்குவிக்கிறது.

—மயூரன்

இராசி பலன்

22.06.1994

புதன்கிழமை

(தமிழுக்கு ஆனி 08

சதுர்த்தசி மு.இ. 7-33 வரை பௌர்ணமி பி. இ. 4-00 வரை சித்தயோகம் இராகுகாலம் காலை 11-54 முதல் 1-24 வரை எமகண்டம் காலை 4-24 முதல் 554 வரை.

மேடம்; வரவுக்கேற்ப செலவு, தொழில் நஷ்டம், தாயார் துயர்.

இடபம்; வீடுகட்டுதல், பொருள் வரவு யோக அனுகூலம்.

மிதுனம்; குடும்ப மகிழ்ச்சி, திருமண பேச்சு, தெய்வீக செலவு.

கடகம்; கவனமாகுதல், தொழில் பொறுப்பு, வாக்கு வாதம்.

சிங்கம்; பிரிந்த திருமணம், மனச்சஞ்சலம், வாக்குவாதம்.

கன்னி; வாகனவிபத்து, வருமாய் அதிகரிப்பு, பாராட்டு.

துலாம்; அதிகாரிகள் துயர், அரசாங்க தண்டம், மனக்கவலை.

விருச்சிகம்; உயர்தரஸ்தானம், வரவாகம், புதிய நட்பு.

தனுசு; தந்தைவழி பிராரனம், தொழில் முடக்கம், வேதனை.

மகரம்; உறவில் அபிமானி, சகோதர உதவி, கல்வியில் சிறப்பு.

கும்பம்; குதூகலம், தொழில் லாபம், மாமியார் பெருமை.

மீனம்; பகைவர் துன்பம், ஏமாற்றம், குடும்பகலகம்.

ஜோஸ்யன்

டி. பி. யங்குயற்றிய வைபவத்தில்

சந்திரிகா பேச அனுமதி மறுப்பு

(தொடர்பு)

ஜனாதிபதியினுடைய கலந்து கொண்ட பாடசாலை பரிசளிப்பு வைபவமொன்றில் கேள் மரணமுதல்வர் சந்திரிகா பேசுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுவிட்டது.

விவேகானந்த பாடசாலை பரிசளிப்பு வைபவத்தில் ஜனாதிபதியும் சந்திரிகாவும் கலந்து கொண்டனர். இதில் பேசுவதற்கு விரும்பியே ஜனாதிபதி மற்றும் சந்திரிகாவின் பெயரும் அழைப்பிதழில் போடப்பட்டிருந்தது. எனினும் பின்னர் ஜனாதிபதியின் பாதுகாப்புக்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரி ஒருவர் சந்திரிகாவின் பெயர் வெட்டப்பட்டு நீக்கப்பட்டிருந்தது. இதனை சந்திரிகாவும் அவதானித்தார்.

பாடசாலை அதிபர் பேசுகையில் இந்தப்பகுதியிலுள்ள பாடசாலைகளும் பண்டாரநாயக்கா குடும்பத்தாரின் பல சேவைகளை செய்துள்ளனர். சந்திரிகா பேசுவதை பாடசாலை பிள்ளைகளும் விரும்புகின்றனர் என்றும் கூறினார் எனினும் சந்திரிகா பேசவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. வி

மாஸ்கரலிங்கத்தை

'டி. வி.' அகற்றவைட்டார்

(தொடர்பு)

நிதி அமைச்சின் செயலாளர் திரு. பாஸ்கரலிங்கத்தை அப்பதவியிலிருந்து அகற்றும் நிலைக்கு ஜனாதிபதி வந்திருக்கிறார்.

தற்போது கொழும்பில் மருத்துவ சிகிச்சை பெற்று வரும் பாஸ்கரலிங்கத்தை உடனடியாக நாடு திரும்பு மாறும் ஜனாதிபதி பாஸ்கரலிங்கத்திற்கு அறிவித்துள்ளார் இதையடுத்து திரு. பாஸ்கரலிங்கம் அடுத்த வாரம் 1ம் திகதி நாடு திரும்புகிறார்.

கொழும்பிற்கு இவர் மருத்துவ சிகிச்சை பெறச் சென்ற போது இவரது உத்தியோக பூர்வஜீப்வேறொருவருக்கு வழங்கப்பட்டதுடன் இவரது ஜிப் சாரதியும் மாற்றப்பட்டிருந்தார். தற்போது அவையும் இவர்க்கு வழங்கப்படுகின்றன.

ஜனாதிபதியின் செயலாளர் திரு. விஜயதாஸ ராஜபக்ஷ ஜனாதிபதியின் ஆலோசகரும் பாஸ்கரலிங்கத்தின் பதவியில் தற்காலிகமாக அமர்த்தப்படக்கூடியவர் என நிதி வட்டாரங்கள் வீரசூரியவுக்கும் மைத்திரிக்கும் இடையே நடைபெற்று வரும் மோதல்களையடுத்தே ஜனாதிபதி தமது முடிவை மாற்றி மீண்டும் பாஸ்கரலிங்கத்திற்கு அவரது பதவியை வழங்கியுள்ளார்.

புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-06-22 புதன் இரவு

08-01 - ஒலிவோசை
ஒலிவிளக்கும் தானியங்கள்-கிராமிய நிகழ்வு
08-20 - ஏற்முன்
"தன்னையே தனக்கு துணை.. தனி நபர்"
08-30 - செய்திகள்
08-40 - நாடகம்
"கொலைப்பிரமுடு"

1994-06-23 வியாழன் காலை

07-02 - வரவேரவணக்கம்
07-15 - விடுதலை கீதங்கள்
07-3 - செய்திகள்
07-35 - பத்திரிகைச் செய்திகள்
07-40 - விடுதலை கீதங்கள் நிகழ்ச்சி விடு தொடர்ச்சி

மாவிளம்பரம்

இனம்

மிகக்கவர்ந் தொழிலாதிதில் 450 கிறாம் சவர்க்கம் பவுடர் பெக்கு ஒன்று வாங்குபவர்களுக்கு தலா ஸ்ரீ நாக பூஷணி அம்மன் வர்ணப்படம் அன்பளிப்பாக வழங்கப்படும் "மில்க்வைற்" (ஏ 4161)

டில்கா வாச் அன் ரேடியோ வேக்ஸ்

கை மணிக்கூடுகள், ரேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்தி கொள்வதற்கு பாவித்த பழைய மணிக்கூடுகள் உதிரிப்பாகங்களை விற்கவும், ஒல்கா வாச் அன் ரேடியோ வேக்ஸ், நாலுவர் மடம், மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. கண்டி ரோடு, சாவகச்சேரி. தலைமை கம்; 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ஏ-4121

தவறிவிட்டது

19-06-94, ஞாயிற்றுக் கிழமை மாகியிலிருந்து சந்திவிலிருந்து மானிப்பாய் வரை. அந்தோனியார். ஆலயத்திற்கு செல்லும் போது கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. விரும்பியோ அல்லது ஆலய வளவிலோ கண்டெடுத்தவர் க. யோ. அன்னி, "மகிழவி" மாகியப்பிட்டி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (வி 1095)

முதலாம் கட்ட மீளளிப்பு

(யாழ்ப்பாணம்)

ஷரீரு நிதி நிறுவனத்தின் யாழ் பணிமனையில் வைப்பீடு செய்தோர்க்கு முதலாம் கட்ட மீளளிப்பு நடைபெறுகின்றது.

இது வரை மீளளிப்புக்கான கோரிக்கைகளைச் சமர்ப்பித்த வைப்பாளர்கள் இம்மாதம் 30ம் திகதிக்கு முன் யாழ்ப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

இன்று

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மெய்வெழுவலர் பிள்ளையார் கோவிலில் இன்று 22ம் திகதி புதன் கிழமை பகல் இரதோற்சவமும், நாளை 23ம் திகதி வியாழக்கிழமை பகல் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

0 0 0

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை எழிலூர் சனசமூக நிலையத்தின் 44வது தொடர் முழு நிலாக்கரம் இன்று 22ம் திகதி புதன்கிழமை மாலை நிலைய மண்டபத்தில் இடம்பெறும். (154)

0 0 0

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ். கிளை, தேவை பயிலுனர் வைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் அனுசரணையுடன் நடாத்தப்படவுள்ள புதிய கற்கை நெறிகளை யாழ் தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் கே. ஜெயரட்ணம் இன்று புதன்கிழமை மு. ப. 10 00 மணிக்கு கிளைத் தலைமையகத்தில் ஆரம்பித்து வைப்பார்.

0 0 0

(4 ம் பக்கம் பார்க்க)

"மரத்தினை நட்டிடுவோம் மழையினை பெற்றிடுவோம்"

பொருளற்ற பெண் என்றால் உயிரற்ற சடமா? இருளுக்குள் வாழ்வதுதான் இவர்களின் விதியா?

★ பிரிட்டிஷ் அகதிகள் அமைப்பு:

இலங்கைத் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவதற்குஎதிர்ப்பு

(தொடர்பு)

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதை பிரிட்டிஷ் அகதிகள் அமைப்புக்குழு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக நாம் அதிஷ்டானான ஜக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகராலயத்துடன் பேசப்போவதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கைக்குத் தமிழர்களைத் திருப்பி அனுப்பும் அவலத்துக்கு அந்த மாதவிப்பு நிலையை இன்னும் சீரழைய விக்கலெனவும் இந்தவிடயத்தில் சம்பந்தப்பட்ட நாடுகளுடன், யு. என். எச். சி. ஆர். அமைப்பும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் அரசு 23 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகளை அனுப்ப முடிவு செய்துள்ளது. இதைப் பின்பற்றி நெதர்லாந்து அரசும் ஒரு தொகை இலங்கைத் தமிழ் அகதிகளை அனுப்ப முடிவு செய்துள்ளது.

இதனைத்தொடர்ந்தே பிரிட்டிஷ் அகதிகள் அமைப்புக் குழு இந்த விவகாரத்தில் தன் வீட்டு அதன் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. (இ-ரி)

தேரேறி வீதியுலா

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நாகர் காலச் சிறப்புடையது இத் திருத்தலம்

வரலாற்றுச் சிறப்புமிக்க மணிப்பல்லவத்தீவில் அமைந்திருக்கும் திருத்தலம் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயமாகும். இவ் ஆலயத்தின் தொன்மை சரித்திரப் பூர்வீக முடிகளது நாகர்களது சிறப்புடையது. இவ் ஆலயத்தின் சிறப்பு அமுத சுரபியை நாகர்களுக்கே கொண்டு "உண்டு கொடுத்தோர் உலகமெல்லாம்" என்ற தத்துவத்தை நினைவூட்டுவது சிறப்புக்குரியது ஆலயத்தின் சோதனையாக, எம் மக்கள் கிரகணங்களை தரிசிக்கவும், செய்யமுடிய தரிசனங்களிலும் இவ்வாலயத்தில் நித்தியபூஜைகள் நடைபெற்று, கண்ணை கவர் தேரேறி எம் மக்களின் குறைகளை கேட்டு வரவி என நம்பலாம் அவர் இன்றி நாமில்லை என்றவகையில் பக்தர்களை நாமெல்லாம் அந்த செல்ல அவர் கருணை பாலிப்பார் நாகரிக சமுதாயம் ஒன்றி சமூக தமிழர்களின் சுதந்திர வேட்கை நிலைபெற அவரை தொழுவோம்.

ப. சிவசிலோகநாதன்
துணைத் தலைவர்,
இந்து இளைஞர் பேரவை.

இன்று

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

(வடக்கோடியிடை)

இன்று திரு. வே. தம்பையா அதிபரின் சேவையைப் பாராட்டி மணிவிழா ஒன்று கட்டுவேலியிடை கிராமத்திர கிலக்கோவிலில் "இராஜ வைத்திய கலா. க. ஐயாசாமி அரங்கு" கிழ நடைபெறவுள்ளது. பேராசிரியர் கா. சிவத்தம்பி பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோர் உட்பட பலர் பல்வேறு பாராட்டுரை வழங்கவுள்ளனர்.

(139)

இலங்கைத்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தினார்கள்.

கடலில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்குவதைக் கண்டித்து 250 க்குக் மேற்பட்ட மீனவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடாத்தினார்கள்.

ஆர்ப்பாட்டத்தின் போது இலங்கை கடற்படையினர் கடலவரும் தனித்தனி எண்டிருந்த மைஜர் ஒன்றையும் துணைத்தூதுவரிடம் கையளித்தார்கள். (வி - ர்)

இப்பத்திரிகை "சுதந்திரன்" லிமிடெட் சுதந்திரன் அச்சகத்தில் வாழ்ப்பாணக் கொக்குவில் மேற்கு வீதி, 18-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966ம் ஆண்டு ஜூன் மாதம் 22-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence Number 3/10336/R

போரை நிறுத்துக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படவேண்டும்.

இவ்வாறு விமானத் தாக்குதல் கண்டித்து வாழ். நகரில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் இறுதியில் வாழ் அரசாங்க அதிபர் ஊடாக ஜனாதிபதி மு. பி; விஜயதுங்கவுக்கு வாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபை அனுப்பிவைத்துள்ள மகஜர் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தங்களுட்பெற்ற பூரண வதிநிலை உள்ளவாறு அமைதி, சமாதானம், சகோதரமான வாழ்வை விரும்புகின்ற தமிழ் மக்களுக்கு எதிராக கல ஆண்டுவரை வகிய ஆட்சிமுறைகளை விட்டொழித்துவிட்டு மிகக் கொடிய யுத்தம் ஒன்றை நடாத்துகின்றீர்கள்.

உலக வரலாற்றில் இவ்வாறான அர்த்தமற்ற கோரக் கடுமைகளின் மறைபடிந்த வரலாறுகளையும், போரினால் ஏற்படக் கூடிய பேரழிவுகளையும் நன்கு அறிந்திருப்பீர்கள்.

கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கும் இனப் பிரச்சனைக்கு தீர்வுகாணுங்கள். மனிதாபிமான ரீதியில் போரை நிறுத்துங்கள். இந்த அர்த்தமற்ற போரினால் பெருமளவு அனர்த்தங்களை கூட்டுறவாளர்களுக்கும், கூட்டுறவுச்சங்கங்களும், கூட்டுறவு ஊழியர்களும் சந்தித்து இருக்கின்றார்கள். கூட்டுறவுச் சங்கங்களின் பல கோடிக் கணக்கான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டுள்ளன. இந்தனை இழப்புக்களின் மத்தியிலும் கூட்டுறவுச் சங்கங்கள் மக்கள் சேவையில் தங்களை அர்ப்பணித்து வருகின்றன.

நீர்வேலி ப. தோ. கூ. சங்கத்தலைவர் இல்லம் விமானக் குண்டு வீச்சிற்கு உள்ளாக்கப்பட்டது. அதேவேளை தலைவர் வே. இராசரத்தினம் அரிநரமாகக் கொல்லப்பட்டதுடன் அவரது மனைவி சி. கிளிநொச்சி மருமகளான புஷ்பராணி ஆகியோர் விமானத்தில் கொல்லப்பட்டதுடன் அவர்களின் குடும்பம் அழிக்கப்பட்டதுடன் அவர்களின் குடும்பமே நிர்க்கதியாகியுள்ளது. இதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இன்று வாழ். மாவட்டத்தில் என்ன நடக்கின்றது. மக்களின் உயிருக்கு உத்தரவாதமில்லை. குடிமக்களை நோக்கி எறிகணைத்தாக்குதல்களும், மக்கள் கூடும் சந்தைகள், பொது இடங்கள், ஆலயங்கள் மீது விமானக் குண்டு வீச்சுத்தாக்குதல்களும், பீரங்கிப் படகுகளிலிருந்து பீரங்கித்தாக்குதல்களும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

எனவே இவ்வாறான நிகழ்வுகளை நிறுத்துவதற்கு பிரிவும் கோரிக்கைகளை தங்களின் மேலான கவனத்துக்கு சமர்ப்பிக்கின்றோம்.

நீர்வேலி ப. தோ. கூ. சங்கத்தலைவர் வே. இராசரத்தினம் அவரது மனைவி சி. கிளிநொச்சி, மருமகள் புஸ்பராணி ஆகியோர் விமானக்குண்டு வீச்சால் அநியாயமாகக் கொல்லப்பட்டதை இடு கிசாரணை மேற்கொள்ளப்படவேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் நல்லெண்ண சமிஞ்ஞையை மதித்து கொண்டு இனப் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு ஏற்ப பொருளாதார தடையை நீக்கி சுமூகமான நிலையை உருவாக்கி அர்த்தமற்ற போர் உடன் நிறுத்தப்படவேண்டும்.

பெறுமதிமிக்க மனித உயிர்களுக்கு மதிப்பளித்து, குடிமக்களுக்கு நோக்கி விமானக் குண்டு வீச்சுத்தாக்குதல் எறிகணை வீச்சுக்கள், பீரங்கித்தாக்குதல்களை நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்கவேண்டல் வேண்டும். என்று அம்மகஜர்க் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-162)

விமானத் தாக்குதலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ் மாவட்டக் கூட்டுறவுச்சபை முன்றலிலிருந்து நேற்றுக் காலை 10-30 மணிக்கு இக் கண்டனப் பேரணி ஆரம்பமானது. வாழ். மாவட்டக் கூட்டுறவுத் தொழிலாளர் சேர்ந்த பணிப்பாளர்கள், அங்கத்தவர்கள், பணியாளர்கள் பெருந் திரளாகக் கலந்து கொண்டார்கள்.

இக் கண்டனப் பேரணியில் கலந்துகொண்ட ஆயிரக்கணக்கான கூட்டுறவாளர்கள் அனைவரும் எறிபடும் பகுதி அணித்து கவோகப்பகுதி தாக்கிய கண்ணம் சென்றனர். புத்த தர்மத்தில் புக்கார ஒன்று? மக்கள் குடியிருப்பும் வாணவர் இடமும் மாறவரும் எதிரியா? எத்தனை விமானங்கள் குண்டுகள் வீசினும் எம் கொள்கை சமரசம் தரவேவர ஓர் இலக்கையாகவர். புத்த தர்மம் கேசம் கிளை அரசே புக்காரா மாவாக குண்டு வீச்சை நிறுத்து. தேசம் நின்று கேசம்முடியாத நீ வானில் நின்று குண்டு வீசாதே என்ற கோஷங்கள் பேரணியில் சென்றவர்களால் எழுப்பப்பட்டது.

இப் பேரணி மணிக்கூடு வீதி, கோணக் கிடு வீதி, லெப். கோணல் சந்தோசபுர வீதி, அருட்சுனை வீதி வழியாக சென்றிலுவைச் சங்க வாழ். மாவட்ட கிளையிடம் பிரதிநிதியிடம் அரசு மணியனையில் வைத்து மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இப் பேரணி கோவில் வீதி, கோணக் கிடு வீதி, கண்டு வீதி வழியாக வாழ். செயலகத்தை சென்றடைந்தது. அங்கு கிறிலங்கா ஜனாதிபதிக்கு விலாசமிடப்பட்ட மகஜர் ஒன்று வாழ் மாவட்ட கூட்டுறவுசபைத் தலைவர் திரு. வை. செந்திநாதனால் அரசாங்க அதிபர் திரு. வே. மாணிக்கவாசகரிடம் கையளிக்கப்பட்டது. 162-த

தேர்தல் குளறுபடிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிக் பெயர் மக்களுக்கு தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் தயார் செய்யப்படுவர்களாக பதிவுகளில் இணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுள்ளன.

சுமார் 10,000 இராணுவத்தினர்களை கொண்ட பகுதிகளில் இரு மொழிகளிலும் ஏற்கனவே தயார் செய்யப்பட்டுவிட்டன. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் பொதுத்தேர்தல்களில் இந்த இராணுவ கிராமங்களும் வவுனியா மாவட்டத்தில் வாக்காளர் தவறாக வாக்களிப்பதற்கு வசதியாகவே இந்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதாம்.

தமிழர் கூட்டுலவை இன்று வாழ்கின்ற சோதும் இராணுவத்தினர் பிடியிலுள்ள பகுதியில் வசிக்கும் சகோதரிகளான தமிழ் வாக்காளர்களது எண்ணிக்கையை மிஞ்சியதாக சிங்கள வாக்காளர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் காட்டும் சூழ்ச்சியே இது வெனவும் தெரிவிக்கப்படுகிறது. (கி-ர்)

உலகக் கிண்ண உதைபந்தாட்டம்:

பிரேஸில்—நெதர்லாந்து அணிகள் வெற்றி

(நியூயோர்க்)

நேற்றுமுன்தினம் நடைபெற்ற உலக கிண்ண உதை

வடக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாவகச்சேரி எல்லை அமைக்கப்படவேண்டும் என்பது தேர்தல் ஆணையாளரின் கருத்து வாட்டிக்கள்ள விடயமாகும். தனக்குத் திருப்திகரமான முறையில் இந்த ஏற்பாடுகளைச் செய்த பின்னர் இந்த தேர்தல் நடத்துவதற்கு அவர் முன்வந்து செய்யவேண்டும். ஆனால் இதனைச் செய்யமுடியாத நிலையில் அப்பகுதிகளான தேர்தல் ரத்துச் செய்வதற்கு அவர் தீர்மானித்தால் இதன் பின்னர் அவர் தேர்தல் முடிவு பிரகடனம் செய்யலாம் அல்லது அப்பகுதிகளான தேர்தலுக்கு வேறொரு திகதியை அறிவிக்கலாம்.

இன்றைய தமிழர்களின் பெருமளவில் வசிக்கும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை தவிர்த்து ஏனைய பகுதிகளில் தேர்தல்களை நடாத்துவதே சரியான திட்டமாக இருக்கும் என கொழும்பிலிருந்து வெளியான தமிழ் வார இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ. தே. க. வின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஐ. தே. க. வின் வைப்பு நிதியிலிருந்து இந்தத் தொகையை வைப்புச் செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபடுவதாக ஓர் இலங்கையரவர். இவர் ஐ. தே. க. அமைச்சர் ஒருவரின் நெருங்கிய சகா எனவும் தெரிவிக்கப்பட்டுள்ள இந்த இலங்கை வர்த்தகர் இப்போது கொழும்பு வந்து தங்கியுள்ளார்.

ஐ. தே. க. வின் தேர்தல் நிதியிலிருந்து 250 கோடி ரூபாவை வழங்க 6 அமைச்சர்கள் முன்வந்துள்ளனர்.

இதற்கு பிரதி உபகாரமாக அவர்கள் ஐ. தே. க. விடம் என்ன சலுகைகளை பெறப்போகிறார்களோ அல்லது எதனைக் கேட்கப்போகிறார்களோ என்பது பற்றித் தெரிவிக்கவில்லை எனவும் அப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது. -இ

வடக்கு-கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா "சன்டே லீடர்" பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது: தற்போதுள்ள ஜனாதிபதி முறையால் சிறுபான்மையினருக்கு நன்மை பயக்கும் எனச் சிறுபான்மையினர் கருத இடமுண்டு. இந்த முறை கொண்டு வந்த 15 வருட காலத்தில், ஜனாதிபதியோடு கிட்ட இணைந்தவர்களுக்கே பெரும் நன்மை பயந்தது. பெரிதாக ஒன்றும் நடைபெறவில்லை.

தேர்தலில் வென்றால் விடுதலைப் புலிகளுடன் பேசுவீர்களா? என்ன நிபந்தனையுடன் பேசுவீர்கள்? என்று கேட்கப்படபோது, திருமதி சிறிமாவோ பதிலளிக்கையில்: நாங்கள் இப்போது தீர்வுத் திட்டம் ஒன்றைத் தயார் செய்து வருகிறோம். சகல மக்களும் ஏற்கக்கூடியதான விரிவான திட்டமாக இது அமையும். ஐ. தே. க. வின் 17 வருட ஆட்சியில் ஒரு திட்டத்தையும் முன்வைக்கவில்லை இத்தீர்வுத் திட்டத்தை ஆதரிப்பதாக கொண்டு சகல தரப்பினரதும் ஆலோசனை பெறப்படும்.

நாங்கள் ஆட்சியை அமைக்காத இவ்வேளையில் நிபந்தனை பற்றிக் கேட்பது சரியல்ல. ஆனால் தமது தருணத்தில் அவைகள் வலுவிழக்க எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அவர் தமது பேட்டியில் மேலும் தெரிவித்தார். கே-த

பந்தாட்டப் போட்டியில் பிரேஸிலும் நெதர்லாந்தும் வெற்றி பெற்றன.

பிரேஸிலுக்கும் - ரஷ்யாவுக்குமிடையில் நடைபெற்றமிக் கிறுகிறுப்பான போட்டியில் பிரேஸில் 2—0 கோல்களால் வெற்றிபெற்றது

நெதர்லாந்துக்கும் சுவிற்சேர்லாந்துக்கும் மிடையில் நடைபெற்ற மற்றுமொரு போட்டியில், நெதர்லாந்து 2—1 கோல்களால் வெற்றிபெற்றது. -வி-த

4000 துப்பாக்கிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருமாறு எடுத்துரைத்தது:

துப்பாக்கிகளை செல்வி இன்றியே அதிகாரமிக்கவர்கள் வைத்திருக்கும் நபர்களுக்கு 3 மாதகால அவகாசம் கொடுத்து பின் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அதிகாரமிக்க கடுகளங்களை வைத்திருப்போர் மீது கடுமையான தண்டனை வழங்கக்கூடிய விதத்தில் சட்டங்களும் மாற்றப்படுவது வரவேற்கத்தக்கதாக தெரிகிறது. -தே-த

முதலில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வான கிளைகளை இது ஏற்படுத்தும் எனவும் ஆலோசகர்கள் தெரிவித்துள்ளனர்.

நாடு முழுவதையும் ஒரே தேர்தல் தொகுதியாக கருதாமல் ஜனாதிபதித் தேர்தல் நடத்துவது இப்போதுள்ள அரசியல் யாப்பின்படி செல்லாது என்பது தெரிந்ததே.

இந்நிலையில் முதலில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவது பொருத்தமான அமையுமென்ற கருத்தை அரசு பரிசீலித்துக்கொண்டிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும் இறுதி முடிவுகள் இன்னும் எடுக்கப்படவில்லை.

ஐ. தே. க. வின் ஆலோசகர்களைச் சேர்ந்த முக்கியஉறுப்பினர்கள், எந்தேர்தல் முதலில் நடத்தி முடிப்பது என்ற விடயத்தில் ஆர்வம் காட்டவறுத்துவிடயமே இதற்குக் காரணம் எனவும் தெரியவருகிறது;

மக்கள்

(1ம்- பக்கத் தொடர்ச்சி)

வைத்துப் பிரசாரங்களை மேற்கொள்வதற்கு மக்கள் கூட்டணி உத்தேசித்துள்ளது.

முன்னாள் கொழும்புப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தலைமையில் இயங்கும் இக்குழுவில் கிறிஸ்தவர் கதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி ஆகியவற்றில் முக்கிய கிரேஷ்ட உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

மாவிலி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியவற்றிற்கு முக்கிய கிரேஷ்ட உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.